வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் -ரோஷ்னா காசிம்

தேதி 16.2.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

ஓமனின் மஸ்கட்டில் இன்று நடைபெற்ற 8-ஆவது இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் திரு ஜெய்சங்கர் சிறப்புரையாற்றினார்.

டெல்லி காவல் துறையின் 78-ஆவது நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

புதுடெல்லி ரயில் நிலையத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 18-ஆக அதிகரித்துள்ளது.

காரைக்கால் மாவட்டத்தில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கான பூமி பூஜை இன்று நடைபெற்றது.

ஜெய்சங்கர்

அர்ஜெண்டினா உடனான பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். ஜெர்மனியில் நடைபெற்ற 61-ஆவது மியூனிச் பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்ட திரு ஜெய்சங்கர் மாநாட்டிற்கிடையே அர்ஜெண்டினா வெளியுறவுத் துறை அமைச்சர் திரு

ஜெரார்டோவை சந்தித்து இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார். அப்போது வர்த்தகம். முதலீடு போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக அவர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து டென்மார்க் ஆஸ்திரியா, மங்கோலியா, நார்வே உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களையும் சந்தித்துப் பேசியதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஓமனின் மஸ்கட்டில் இன்று நடைபெற்ற 8-ஆவது இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் திரு ஜெய்சங்கர் சிறப்புரையாற்றினார். அப்போது வியட்நாம் முதல் மொரீசியஸ் வரையிலான நாடுகளில் கடற்படைகள், மற்றும் கடலோர காவல் படைகளுக்கு இந்தியா பயிற்சி அளித்து வருவதாக கூறினார். மேலும் வல்லரசுகள் மற்றும் தெற்குலக நாடுகளின் நம்பிக்கையையும் இந்தியா பெற்றுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

முன்னதாக, ஜெர்மனி வெளியுறவுத் துறை அமைச்சர் திரு போரீஸ் பிஸ்டோரியசை சந்தித்து இருநாடுகளுக்கு இடையேயான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு குறித்தும் அமைச்சர் விவாதித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

*புதுடெல்லி-காவல் துறை*

டெல்லி காவல் துறையின் 78-ஆவது நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது. டெல்லி கிங்ஸ்வே முகாமில் நடைபெற்ற

காவல்துறையினரின் அணி வகுப்பு மரியாதையை உள்துறை இணை அமைச்சர் திரு நித்தியானந்த ராய் ஏற்றுக் கொண்டார். நிகழ்ச்சியில் பேசிய அவர் நாட்டிலேயே டெல்லி காவல் துறை சிறப்பாக செயல்பட்டு வருவதாக தெரிவித்தார். ஜி-20 உச்சி மாநாடு மற்றும் கோவிட் பெருந்தொற்று காலங்களில் காவல் துறையினரின் செயல்பாடுகள் பாராட்டுதலுக்கு உரியது என்றும் குற்றச் செயல்களைத் தடுத்து சட்டம்-ஒழுங்கை பாதுகாப்பதில் டெல்லி காவல் துறையினர் குறிப்பிடத் தக்க பங்காற்றி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ் சங்கமம்

காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சி ஒரே பாரதம்-உன்னத பாரதம் என்ற உணர்வை போற்றி ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது என்று மத்திய தகவல் ஒலிபரப்பத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.தமிழகம்-காசி இடையே நிலவி வரும் தொன்றுதொட்ட கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருவதாக அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். இதன் மூலம் ஆன்மிகம், கலாச்சாரம் மற்றும் வரலாற்று சிறப்பு மிக்க தொடர்புகளை ஒருங்கிணைப்பதாக அவர் கூறி உள்ளார். காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியில் அனைவரும் பங்கேற்குமாறு திரு எல் முருகன் அழைப்பு விடுத்துள்ளார்.

*ரயில்-கூட்ட நெரிசல்*

புதுடெல்லி ரயில் நிலையத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 18-ஆக அதிகரித்துள்ளது. பிரயாக்ராஜ் கும்பமேளாவில் பங்கேற்பதற்காக நேற்று இரவு அதிக அளவிலான மக்கள் ரயில் நிலையத்தில் திரண்டதை அடுத்து கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபது முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜகதீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, பாதுகாப்பத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரூபாயும், படுகாயம் அடைந்தவர்களுக்கு தலா இரண்டரை லட்சம் ரூபாயும் சிறிய அளவில் காயம் அடைந்தவர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாயும் நிவாரணத் தொகையாக வழங்கப்படும் என்று ரயில்வே அறிவித்துள்ளது.இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும், இதுகுறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாகும் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார். மீண்டும் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாமல் தவிர்க்கும் வகையில்

பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஃபிட் இண்டியா

ஃபிட் இண்டியா இயக்கத்தின் ஒரு பகுதியாக **சண்டே ஆன் சைக்கிள்** மிதிவண்டி பேரணி இன்று காலை மும்பை **கேட்வே ஆப் இண்டியா** பகுதியில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து பங்கேற்ற மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இந்த இயக்கம் பற்றி கூறுகையில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கு மக்கள் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டார். மேலும் சுற்றுச்சூழலுக்கு சாதகமான உடல் பருமன் பிரச்சனையை குறைப்பது போன்ற பல நன்மைகளை அடைய ஒவ்வொருவரும் மிதிவண்டிகளை பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஓஎன்ஜிசி

எண்ணெய் மற்றும் எரிவாயு பயன்பாட்டைக் குறைத்து பசுமை நிறைந்த இயற்கையை உருவாக்குதல் என்ற நிகழ்வில் காரைக்கால் ஓஎன்ஜிசி நிறுவனம் சார்பில் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது. காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொடங்கிய இப்பேரணியை மாவட்ட ஆட்சியர் திரு சோம சேகர் அப்பாராவ்,

முதுநிலை காவல் கண்காணிப்பாளர் லட்சமி சவ்ஜன்யா மற்றும் ஓஎன்ஜிசி செயல் இயக்குநர் திரு உதய் பாஸ்வான் ஆகியோர் கொடி அசைத்து தொடக்கி வைத்தனர். பேரணியில் பள்ளி மாணவர்கள் மற்றும் நிறுவன ஊழியர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் எரிபொருள் பயன்பாட்டை குறைக்க வேண்டும் மற்றும் இயற்கையை பாதுகாப்போம் என்ற பதாகைகளை ஏந்தியும், கோஷமிட்டும் நடந்து சென்றனர்.

கும்பமேளா

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் அமைக்கப்பட்டுள்ள **கலா கிராமத்தில்** மத்திய அரசின் வீடுதோறும் குடிநீர் குழாய் மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்கும் ஜல்ஜீவன் திட்டத்தை விளக்கும் வகையிலும் கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் மேற்கொண்டுள்ள வளர்ச்சிப் பணிகளை விளக்கும் விதமாகவும் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு மாநிலங்களின் கலாச்சாரத்தை விளக்கும் வகையிலான பொருட்கள், ஆடை அணிகலன்கள் உள்ளிட்டவை காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு மாநில கலைஞர்கள் பங்கேற்கும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

அந்த வகையில் அனைத்து மாநில கைவினை கலைஞர்களின் தயாரிப்புகளை காட்சிக்கும், விற்பனைக்கும் அமைக்கப்பட்டுள்ள

அரங்கில் தமிழ்நாடு சார்பில் பங்கேற்றுள்ள திருமதி கீதா கோபி கூறுகையில்.....................

(வாய்ஸ்)

பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் பக்தர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண் பரிசோதனை முகாம் குறித்தும் மற்ற வசதிகள் குறித்தும் எமது நிருபர் கூறுகையில்.........

*காரைக்கால்*

எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாக காரைக்கால் மாவட்ட மீனவர்கள் 13 பேர் மீது இலங்கை கடற்படையினர் கடந்த மாதம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்த கிளிஞ்சல் மேடு பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவருக்கு காலில் குண்டடி பட்டதைத் தொடர்ந்து துப்பாகிக் சூடு சம்பவத்தைக் கண்டித்து காரைக்கால் மாவட்ட மீனவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். புதுச்சேரி மீனவளம் மற்றும் மீனவ நலத்துறைச் செயலர் திரு மணிகண்டன், காயம் அடைந்த மீனவரின் குடும்பத்தாருக்கு நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அப்போது பேசிய அவர் காயம் அடைந்தவரை மேல் சிகிச்சைக்காக இந்தியா அழைத்து வருவது பற்றி துணை நிலை ஆளுநர் அலுவலகம், புதுச்சேரி அரசு மற்றும் மீனவர் நலத்துறை மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார். எனவே மீனவர்கள் தங்கள் போராட்டங்களைக் கைவிடுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

*காரைக்கால்-சாலை*

காரைக்கால் மாவட்டத்தில் திருநள்ளாறு, நிரவி, டி.ஆர் பட்டிணம், நெடுங்காடு உள்ளிட்ட பகுதிகளில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான பூமி பூஜை இன்று நடைபெற்றது. பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் தலைமையில் நடைபெற்ற பூமி பூஜையில் அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு நாஜீம், திரு சிவா, திருமதி சந்திரப் பிரியங்கா, திரு நாக தியாகராஜன் மற்றும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு சோம சேகர் அப்பாராவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*ஆரோவில்*

புதுச்சேரியை அடுத்த ஆரோவில்லில் 3 ஆயிரத்து 500 பேர் பங்கேற்ற மாரத்தான் ஓட்டப் போட்டி இன்று நடைபெற்றது. ஆரோவில் சர்வதேச நகரத்தில் ஆண்டு தோறும் அமைதிக்கான மாரத்தான் ஓட்டம் நடத்தப்படும். அந்த வகையில் இன்று நடைபெற்ற இந்த ஆண்டுக்கான மாரத்தானின் சென்னை, பெங்களுரு, மும்பை, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஆரோவில் நகரத்தில் வசிக்கும் வெளிநாட்டவரும் கலந்து கொண்டனர். உலக அமைதி, மனித ஒற்றுமை உடல் வலிமை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை வலியுறுத்தி, நடைபெற்ற 42 கிலோமீட்டர் தூர ஓட்டத்தில் சிறுவர்கள்

முதல் பெரியவர்கள் வரை கலந்து கொண்டு ஆர்வத்துடன் ஓடினர். போட்டியில் வென்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

*கால்பந்து*

கொல்கத்தாவில் இன்று இரவு 7.30 மணிக்கு தொடங்கும் ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் முகமதியன் அணி, ஈஸ்டு பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

*ஹாக்கி*

புவனேஸ்வர் கலிங்கா மைதானத்தில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும் புரோ லீக் ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்தியா,ஸ்பெயினை எதிர்கொள்கிறது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/16.2.2025/Script.

-------------------------------------